

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : துன்புறுவோருக்கு ஆறுதல்: துன்புறும் யாவரும் குறிப்பாக ஏழைகள், அகதிகள், ஒதுக்கப்பட்டோர் அனைவரும் நமது சமூகங்களில் வரவேற்கப்பட்டு ஆறுதல் அடைய வேண்டுமென்று**

**பிப்ரவரி மாத கரு : மனிதத்தன்மையில் கடவுளின் கொடையை வரவேற்றல்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 5 ஞா | காலை 6.45<br>காலை 8.45 | நவநாள் & திருப்பலி (த)<br>நவநாள் & திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 5-ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3)<br>பொதுக்கால 5-ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3) |
| பிப் 6 திங் | மாலை 7.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 4 |
| பிப் 7 செவ் | மாலை 7.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 5 |
| பிப் 8 புதன் | மாலை 7.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 6 |
| பிப் 9 வியா | மாலை 7.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 7 |
| பிப் 10 வெள் | மாலை 7.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 8 |
| பிப் 11 சனி | மாலை 6.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) & பவனி | புலூமா திருவிழா |
| பிப் 12 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, த, ம) | பொதுக்கால 6-ஆம் ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| பிப் 5 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| பிப் 6 திங் | மாலை 4.00~6.30 | ஆலயம் | லூர்து குளியல் |
| பிப் 7 செவ் | காலை 8.30<br>மாலை 4.00~6.30 | பெர். மை 1-3<br>ஆலயம் | பங்கு பரிந்துரை செபம்<br>லூர்து குளியல் |
| பிப் 8 புதன் | மாலை 4.00~6.30 | ஆலயம் | லூர்து குளியல் |
| பிப் 9 வியா | காலை 8.30~11.00 | ஆலயம் | லூர்து குளியல் |
| பிப் 10 வெள் | மாலை 4.00~6.30 | ஆலயம் | லூர்து குளியல் |
| பிப் 11 சனி | காலை 8.30~11.00 | ஆலயம் | லூர்து குளியல் |
| 12 பிப் 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 19 பிப் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

<u>பிப்ரவரி மாத திருமணம் 2017</u>

பிப் 25 மாலை 4.30 திருமணம் (த) பெர்னட் த/பெ சந்தனசாமி & ஜெனிபர் த/பெ அந்தோணி

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. குடும்ப செபம்:** மாதத்தில் ஒருமுறை குடும்ப செபம் செய்யலாம் என்று பங்கு மாநாடு 2016ல் முன்மொழியப்பட்டது. பிப்ரவரி மாதத்திற்கான குடும்ப செபம் 5/2/17 (ஞாயிறு)-ல் நடைபெறும். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது குழந்தைகளை குடும்ப செபத்தில் இணைய ஆர்வம் காட்டுங்கள். இந்த நேரத்தின் போது பங்கில் எந்த செயல்பாடுகளும் நடக்காது.

**2. 24 பிப் 2017 மலேசியாவிற்கான செப நாளையொட்டி திருப்பலி மற்றும் ஆராதனை நேரலை:** பினாங்கு, பரிசுத்த ஆவி பேராலயத்தில் மாலை 7.30க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

**3. 24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்:** SPM & அதற்கு மேல் முடித்தவர்களுக்கும் தனித்த இளைஞர்களுக்கும் பொதுவானது. இந்த நிகழ்வு மறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வம் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 4 ~ 5 பிப் 2017 முதல் ஒவ்வொரு மாதமும் முதலாவது சனி & ஞாயிறு மதியம் 12~மதியம் 12 மணி வரை நடைபெறும். இடம் பதிவின் போது தெரிவிக்கப்படும். கட்டணம் இல்லை. தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தொடர்புக்கு: வின்சென்ட் PDPI (04-2611350) அலுவலக நேரம் திங்- வெள்/ மின்னஞ்சல் pdpi2005@gmail.com

**4. மலேசியாவிற்கான செப நாள் 2017 - திருப்பலி & ஆராதனை:** மலேசியா கத்தோலிக்க ஆயர் மன்றம் (கஆடி) ஏகமனதாக அனைத்து ஆலயங்களிலும், சிற்றாலயங்களிலும், மத சார்புடைய சமூகங்களிலும் திருவிழிப்பு செபம் வரும் 24 பிப் 2017 (வெள்) மாலை 7.30 ~ இரவு 10.00 வரை திருப்பலி மற்றும் ஆராதனையுடன் நடத்த முடிவு செய்துள்ளது.

**5. மலேசியன் கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் 2: நாள்**: 23 ~ 27 ஜூன் 2017 (வெள்~செவ்) **இடம்**: பினாங்கு தீவு **பதிவிற்கான இறுதி நாள்**: 31 மார்ச் 2017 (வெள்) **பதிவு கட்டணம்**: ரிம 150/- **தொடர்புக்கு**: பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851)/ மின்னஞ்சல்: pdyn@pgdiocese.org

**6. புலூமா திருவிழா:**

- புலூமா பவனி அன்னையின் சுரூபத்தைச் தூக்கிச்செல்ல ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து உங்களது பெயர்களை 5 பிப் 2017க்குள் பங்கு அலுவலகத்தில் அல்லது பங்கு மண்டபத்தில் ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: திரு. அ. வேளாங்கண்ணி (016-5643235)
- பங்கு திருவிழாவின்போது (உணவு வழங்க) அல்லது ரொக்கமாக நன்கொடைகளை செலுத்த விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.
- அன்னையின் சுரூபத்தை தூக்கிச் செல்பவர்கள் மற்றும் அதிச தலைவர்கள் 9/2/17 நவநாள் திருப்பலிக்கு பிறகு ஆலயத்தில் நடைபெறும் விளக்கவுரைக்கு வருகை தரவும்.
- 10/2/17 (வெள்) மாலை 9.00க்கு நவநாள் திருப்பலிக்கு பிறகு ஆலயத்தில் அனைத்து திருவழிப்பாட்டு பணிக்குழுக்கள், (சிற்றாலய தலைவர்கள், அன்னையின் சுரூபத்தை தூக்கிச் செல்பவர்கள் மற்றும் ரேலா பிரதிநிதி) ஆகியோருக்கு திருவிழா விளக்கவுரை நடைபெறும். வருகை கட்டாயம்

**7. பழைய செய்திதாள்கள்:** கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு, புதிய சிற்றாலயத்தை கட்டுவதற்காக நிதி திரட்ட பழைய செய்தித்தாள்களை சேகரித்து விற்க திட்டமிட்டுள்ளது. கொடுக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளை கொண்டு வந்து பங்கு மண்டபத்தில் கொடுக்கலாம்.

**8. சீடத்துவ நிகழ்வுகள்**: உங்களது பெயர்களை பதிவு செய்தவர்கள் 18 பிப் 2017 (சனி) @ காலை 10.30க்கு பெர். மையத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**9. தகவலுக்கான கோரிக்கை:** ஈப்போ லூர்து பாரம்பரிய காட்சியகம் பின்வரும் தகவல்களை சேகரிக்கிறது. அ) **M. Dawson**, 1959-ல் பீடத்திற்கு மேலுள்ள 4 சித்திர வேலைப்பாட்டு கண்ணாடிகளுக்கு வர்ணம் தீட்டிய தனி நபர் ஆ) பளிங்கு பீட மேடை மற்றும் பளிங்கு சுவர் பற்றிய மேல் அதிக தகவல்கள் இ) **திரு. K. அருளானந்தம்,** திரு பிலிப்ஸ் எட்ரியன் பெரிஸ் (P. A. பெரிஸ்) M. B. E.. உடன் இணைந்து பணியாற்றிய ஆலய கட்டிட வடிவமைப்பாளர்.

**10. ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

**11. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**12. விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜனவரி 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- 221,489.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- 241,357.51 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

| | | | |
|---|---|---|---|
| **29/01/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,005.05 | | **காலை 9.00** - RM 1,733.95 | **மொத்தம்**– RM 2,739.00 |
| **2015** - RM 20.00 | **2016** - RM 54.00 | **2017** - RM 380.00 | **மொத்தம்**– RM 454.00 |

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்